இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in   murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 92 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 24 – வெள்ளிக்கிழமை 10 நவம்பர் 2023 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 92 : Thiruvalluvar Year - 2054 - Ayppasi 24 - Friday 10 November 2023 - Dak 8 Pages ₹ 5.00


## 20 சதவிகிதம் போனசுடன் – தமிழ்நாடு

# தேயிலை தோட்டக் கழகத் தொழிலாளர்களுக்கு ஊதியம் அதிகரிப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, நவ. 10-

**தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்களுக்கு திருத்தியமைக்கப்பட்ட தினக்கூலி, ஏழாவது ஊதியக்குழுவின் திருத்திய ஊதிய விகிதம் மற்றும் 20% போனஸ் வழங்கிட முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.**

இதுகுறித்து வெளியான அரசின் செய்திக் குறிப்பு வருமாறு :-

தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் உரிமைகளைக் காப்பதோடு, தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களது வழியில் செயல்பட்டு வரும் திராவிட மாடல் அரசு மேற்கொண்டு, தொழிலாளர்கள் நலனை கண்ணின் இமைபோல் காத்து வருகிறது.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கு நீலகிரி மாவட்டத்தின் வனப்பகுதிகள் மற்றும் பிற பொருத்தமான பகுதிகளில் உள்ள தேயிலைத் தோட்டங்களில் வேலைவாய்ப்பு அளிப்பதை நோக்கமாகக்கொண்டு, தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகமானது (TANTEA) 1976 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில் நிலவும் கடுமையான நிதி நெருக்கடிக்கிடையிலும், ஓய்வுபெற்ற தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்களின் பணிக்கொடை மற்றும் ஓய்வூதியப் பணப்பலன்களை வழங்கும்பொருட்டு. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஏற்கனவே ரூ.29.38 கோடியினை வழங்கிட உத்தரவிட்டதன் அடிப்படையில், 1,093 பணியாளர்கள் பயனடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று, பணி ஓய்விற்குப் பிறகும் தங்களுடைய குடியிருப்புகளை காலி செய்யாத தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்கள் நலன் கருதி, நீலகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டு வரும் ரூ.14 இலட்சம் மதிப்பிலான அடுக்குமாடிக் குடியிருப்புக்கான பயனாளிகளின் பங்களிப்பை அரசே ஏற்க முடிவு செய்து, ஓய்வு பெற்ற தொழிலாளர்கள் மேற்காணும் அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு இடம்பெயர ஏதுவாக, முதலமைச்சர் அவர்கள் குடியிருப்புகளின் பயனாளிகள் பங்களிப்பாக ரூ.13.46 கோடியை ஒரு சிறப்பு நிகழ்வாக வழங்கிட உத்தரவிட்டுள்ளார்.



இவற்றின் வாயிலாக தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையை உறுதி செய்திட தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் தொடர் முயற்சிகள் புலனாகும்.

இந்தச் சூழ்நிலையில், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்கள் நாளொன்றுக்கு தாங்கள் பெற்றுவரும் தினக்கூலி ரூ.375/ஐ, திருத்தியமைக்கப்பட்ட தினக்கூலியை நடைமுறைப்படுத்தும் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், தனியார் தேயிலைத் தோட்ட தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவதைப் போல, நாளொன்றுக்கு ரூ.438/ ஆக உயர்த்தி வழங்கிட வேண்டுமென்று நீண்ட காலமாகக் கோரிக்கை விடுத்து வந்தனர். மேலும், 3-11- 2023 அன்று தங்களைச் சந்தித்த நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா அவர்களிடம் இந்தக் கோரிக்கையையும், நீண்டகாலமாக உள்ள இதர கோரிக்கைகளையும் கனிவுடன் பரிசீலித்து, அரசுக்குப் பரிந்துரைக்க வேண்டுமெனக் கோரியிருந்தனர்.

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்களின் மேற்படி கோரிக்கைகளை முதலமைச்சர் அவர்கள் கனிவுடன் பரிசீலித்து, நிறைவேற்றிட வேண்டுமென்று, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா அவர்களும் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்நிலையில், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்களின் கோரிக்கைகளைப் பரிசீலித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தனியார் தோட்டத் தேயிலை தொழிலாளர்களுக்கு இணையாக தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்களுக்கும் திருத்தியமைக்கப்பட்ட தினக்கூலியாக நாளொன்றுக்கு ரூ.438/ வழங்கிடவும், அதனை உடனடியாக நடைமுறைப்படுத்திடவும் உத்தரவிட்டுள்ளார். இதற்கான தொடர் செலவினம் ஆண்டொன்றுக்கு ரூ.7.78 கோடி ஆகும். அதோடு, TANTEA தொழிலாளர்களுக்கு 20% போனஸ் வழங்கவும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகப் (TANTEA) பணியாளர்களுக்கு ஏழாவது ஊதிய குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் திருத்திய ஊதிய விகிதங்களை அமல்படுத்துவதற்கான ஆணைகள் ஏற்கெனவே வெளியிடப்பட்டு, அவை நடைமுறைப்படுத்தாமல் இருந்த நிலை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்ததையடுத்து, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், TANTEA பணியாளர்களுக்கு திருத்திய ஊதிய விகிதங்களை நிலுவைத் தொகையுடன் உடனடியாக வழங்கவும் உத்தரவிட்டுள்ளார்கள்.

இதற்காக TANTEAக்கு கூடுதலாக 12.78 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும். இந்த திருத்திய ஊதிய விகிதம் நடைமுறைபடுத்தப்படுவதால் 212 பணியாளர்கள் பயனடைவார்கள்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார் என்று அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### மக்களவைத் தேர்தல் குறித்து

## சென்னையில் இந்திய தேர்தல் ஆணையம் ஆலோசனை!

### தமிழ்நாடு உள்ளிட்ட 5 மாநிலத் தேர்தல் அதிகாரிகள் பங்கேற்பு!

*சென்னை, நவ.10-*

*நாடாளுமன்றத் தேர்தல் குறித்து தமிழ்நாடு உள்ளிட்ட 5 மாநில தேர்தல் அதிகாரிகளுடன் தேர்தல் துணை ஆணையர்கள் சென்னையில் ஆலோசனை மேற்கொண்டனர்.*

*மக்களவைக்கு அடுத்த ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் பொதுத்தேர்தல் நடைபெற உள்ளது. இந்த நிலையில் தேர்தல் முன்னேற்பாடுகள் தொடர்பாக இந்திய தேர்தல் ஆணையம் சென்னையில் உள்ள தனியார் நட்சத்திர விடுதியில் ஆலோசனை மேற்கொண்டனர்.*

*துணைத்தேர்தல் ஆணையர்கள் தர்மேந்திர ஷர்மா, நிதேஷ் வியாஸ், மனோஜ்குமார் சாகு, தேர்தல் ஆணைய இயக்குநர் பங்கஜ் ஸ்ரீவட்சவா ஆகியோர் தென் மாநில தலைமைத் தேர்தல் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினர். இந்த கூட்டத்தில், தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு பங்கேற்றார்.*

*கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா, கேரளா ஆகிய மாநிலங்களின் தலைமைத் தேர்தல் அதிகாரிகளும், புதுச்சேரி, அந்தமான் நிக்கோபார் தீவுகள், லட்சத்தீவுகள் ஆகிய யூனியன் பிரதேச தலைமை தேர்தல் அதிகாரிகளும் ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்றனர்.*

*தேர்தலுக்கான மின்னணு இயந்திரங்கள், உபகரணங்கள், வாக்குச்சாவடி, தேர்தல் பணியாளர்கள், பாதுகாப்பு பணியாளர்கள், வாக்குச்சாவடிகள் தொடர்பாக கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.*

---

### தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை

## இயல்பை விட 15 % குறைவு!

*சென்னை, நவ.10-*

*தமிழ்நாட்டில் அக்டோபர் முதல் டிசம்பர் இறுதி வரைக்கும் வடகிழக்கு பருவமழை காலமாகும். இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை தாமதமாக தொடங்கி தாமதமாக நிறைவடைந்து. இதன் காரணமாக வடகிழக்கு பருவமழையும் தாமதமாகவே தொடங்கியது. அக்டோபர் 1 முதல் நேற்று வரை வழக்கமாக பெய்யும் மழை அளவை விட 15 சதவிகிதம் குறைவாகவே மழை பதிவாகியுள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது.*

*வழக்கமாக அக்டோபர் 1 முதல் நேற்றுவரை 243.6மி.மீ. மழை பதிவான நிலையில் தற்போது 206.4 மி.மீ. மழை மட்டுமே பெய்து உள்ளது. வடகிழக்கு பருவமழை தாமதமாக தொடங்கியிருந்தாலும் ஆரம்ப காலத்தில் மழை பெரிய அளவில் பெய்யவில்லை. இருந்த போதிலும் தென்கிழக்கு அரபிக்கடலில் மற்றும் அதனை ஒட்டியுள்ள மத்திய கிழக்கு அரபிக்கடல் பகுதியில் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவியது.*

---

### மேல்முறையீடு செய்த தகுதியான பயனாளிகளுக்கு ரூ.1000 வரவு வைப்பு!

## கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் - கூடுதல் பயனாளிகள் சேர்ப்பு!

### இன்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்!

சென்னை, நவ.10-

கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தில் மேல்முறையீடு செய்த தகுதியான பயனாளர்களுக்கு இன்று முதல் அவர்களது வங்கி கணக்குகளில் ஆயிரம் ரூபாய் வரவு வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று கலை வாணர் அரங்கில் நடை பெறும் விழாவில் தொடங்கி வைக்கிறார்.

பெண்களுக்கு மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் செப்டம்பர் 15ஆம் தேதி தொடங்கி வைத்தார்.

ஒருகோடியே ஆறு லட்சத்து 50 ஆயிரம் பேருக்கு மகளிர் உரிமைத்தொகை வழங்கப்பட்டது.

இந்த திட்டத்திற்கு விண்ணப்பித்து நிராகரிக்கப்பட்டவர்கள் மேல்முறையீடு செய்ய அக்டோபர் 25ஆம் தேதி வரை அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. இதை பயன்படுத்தி தமிழ்நாடு முழுவதும் 11 லட்சத்து 85 ஆயிரம் பேர் மேல்முறையீடு செய்திருந்தனர். அவர்களில் தகுதியான நபர்களை தேர்ந்தெடுக்கும் பணி கடந்த சில வாரங்களாக நடைபெற்று வந்தது.

இந்நிலையில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளர்களுக்கு இந்த மாதம் முதல் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து தகுதியான பயனாளிகளுக்கு சோதனை அடிப்படையில் அவர்களது வங்கி கணக்குகளில் ஒரு ரூபாய் வரவு வைக்கப்பட்டு வருகிறது.

தீப ஒளி திருநாளையொட்டி மகளிர் உரிமைத்தொகை இந்த மாதம் இன்று முதல் வரவு வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கும் இன்று முதல் மகளிர் உரிமைத்தொகை வரவு வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### தமிழ்நாடு அரசு இயற்றிய

## ஆன்லைன் சூதாட்ட தடைச் சட்டம் செல்லும்!

### சென்னை உயர்நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு!

சென்னை, நவ.10-

தமிழ்நாடு அரசு இயற்றிய ஆன்லைன் சூதாட்ட தடைச்சட்டம் செல்லும் என்று சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. ஆன்லைன் சூதாட்டங்களுக்கு தடை விதித்து தமிழ்நாடு அரசு சட்டம் இயற்றியது. இந்த சட்டத்தை ரத்து செய்யக் கோரி ஆன்லைன் விளையாட்டு நிறுவனங்கள் தரப்பில் உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டன. இந்த வழக்கு சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி சங்கா பூர்வாலா, நீதிபதி ஆதிகேசவலு அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது.

இந்த வழக்குகளில், அனைத்துத் தரப்பு வாதங்களும் முடிவடைந்ததை அடுத்து, நேற்று சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி அமர்வு தீர்ப்பளித்தது.

தமிழ்நாடு அரசு இயற்றிய ஆன்லைன் சூதாட்ட தடைச் சட்டம் செல்லும் என்று சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. திறமைக்கான ஆன்லைன் விளையாட்டுகளான ரம்மி, போக்கரை தடை செய்த பிரிவுகள் ரத்து செய்யப்படுகிறது. ஆன்லைன் ரம்மி உள்ளிட்டவற்றை விளையாடுவதற்கான வயது, நேரம் போன்றவற்றை அரசு நிர்ணயிக்கலாம் என்றும் தெரிவித்துள்ளது.

ஆன்லைன் சூதாட்டத்தை தடை செய்து தி.மு.க. அரசு நிறைவேற்றி அனுப்பிய மசோதாவை ஆளுநர் ரவி பல மாதங்கள் கிடப்பில் போட்டிருந்தார். தமிழ்நாடு அரசின் மசோதாவை ஆளுநர் திருப்பி அனுப்பிய நிலையில் தமிழ்நாடு சட்டமன்றம் மீண்டும் நிறைவேற்றி அனுப்பியது குறிப்பிடத்தக்கது.

---

### டெல்லியில் காற்று மாசைக் குறைக்க

## செயற்கை மழைக்கு திட்டம்!

*புதுடெல்லி, நவ.10-*

*தலைநகர் டெல்லியில் காற்று மாசு கடுமையாக இருந்து வருகிறது. காற்றின் தரக்குறியீடு 480க்கு மேல் சென்றது. நேற்று காலை டெல்லியில் ஒட்டு மொத்த காற்றின் தரக் குறியீடு 421ஆக இருந்தது.*

*இது கடுமையான பிரிவில் உள்ளது. இதனால் மக்கள் கடும் அவதியடைந்துள்ளனர். காற்று மாசைக் குறைக்க மாநில அரசு பல்வேறு நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த நிலையில் காற்று மாசைக் குறைக்க செயற்கை மழையை பெய்ய வைக்க திட்டமிட்டுள்ளது.*

*இது தொடர்பாக டெல்லி மாநில சுற்றுச்சூழல் அமைச்சர் கோபால்ராய், நிதி மந்திரி அதிஷி ஆகியோர் ஐ.ஐ.டி. கான்பூர் குழுவுடன் ஆலோசனை கூட்டத்தை நடத்தினர். இதில் டெல்லியில் காற்று மாசைக் குறைக்க கிளவுட் சீடிங் மூலம் செயற்கை மழையை பெய்ய வைப்பது குறித்து விவாதிக்கப்பட்டது.*

*தற்போது ஐ.ஐ.டி. குழுவிடம் விரிவான திட்டத்தை டெல்லி அரசு கேட்டுள்ளது. டெல்லியில் காற்று மாசைக் குறைக்கக் கோரி சுப்ரீம் கோர்ட்டில் தொடரப்பட்ட வழக்கு விசாரணையில் இந்த திட்டம் பற்றி டெல்லி அரசு சமர்ப்பிக்க உள்ளது.*

*கோர்ட்டு அனுமதி அளித்தால் டெல்லி, மத்திய அரசும் செயற்கை மழை திட்டத்தை செயல்படுத்தும்.*

*செயற்கை மழையை உருவாக்க குறைந்த பட்சம் 40 சதவீத மேக மூட்டம் அவசியம் என்று ஐ.ஐ.டி. குழுவினர் தெரிவித்துள்ளனர்.*

*மேக மூட்டம் வருகிற 20, 21ந் தேதிகளில் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே அன்று செயற்கை மழையை பெய்ய வைக்கலாம் என்று அமைச்சர் கோபால் ராய் தெரிவித்தார்.*

---

### கர்நாடக அணைகளில் இருந்து

## காவிரி ஆற்றில் உபரி நீர் திறப்பு!

*பெங்களூரு, நவ.10-*

*கர்நாடக அணைகளில் இருந்து காவிரி ஆற்றில் உபரி நீர் திறப்பு 818 கன அடியில் இருந்து 820 கன அடியாக உயர்ந்துள்ளது. கே.ஆர்.எஸ். அணையில் இருந்து காவிரி ஆற்றில் வினாடிக்கு 520 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது.*

*அதேபோல, கபினி அணையில் இருந்து காவிரி ஆற்றில் உபரி நீர் வெளியேற்றம் 300 கன அடியாக தொடர்ந்து நீடிக்கிறது. கே.ஆர்.எஸ். அணையின் நீர்மட்டம் மீண்டும் 100 அடியை கடந்த நிலையில், கபினி அணையின் நீர்மட்டம் 74.74 கன அடியாக உள்ளது.*